**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை – **செல்வி V. பார்கவி., B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
********

2022–ம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ம்நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ வருடம் மார்கழி மாதம் 27–ம்நாள்
**********

**அசல் வழக்கு எண். 67/2021–ல் இடைமனு எண். 02/2021**

மனோன்மணி ...மனுதாரர்/ வாதி

...எதிர்...

கிருஷ்ணமூர்த்தி ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 23.11.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். கார்த்திகேயன் அவர்களும் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக போதிய வாய்ப்புக்கொடுத்து இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை செய்யமுன்வராத காரணத்தினால் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டு மனுதாரர் தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

தாவா சொத்தை மனுதாரர்/வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ அல்லது முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு..ச.கட்டளை 39, விதிகள் 1 மற்றும் 2 –ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரார் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து அருள்மிகு வைத்தீஸவரன்கோயில் வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்துக்கு சொந்தமானது. தாவா சொத்தினை சாம்பசிவம் மனைவி சிந்தாமணி என்பவர் தேவஸ்தானத்திடம் பகுதி பாத்திய உரிமை பெற்று அவர் மனுதாரரின் கணவர் சீதாராமனிடம் சரியான பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு தாவா சொத்தின் பகுதி பாத்திய உரிமையை மாற்றிக்கொடுத்து மனுதாரரின் கணவரின் பகுதி பாத்திய உரிமையிலும்,

அனுபவத்திலும் இருந்து வந்தது. எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு தாவா சொத்து புல எண். 10/1–ல் 1.42 ஏக்கர் நிலம் பகுதி பாத்திய உரிமையில் இருந்து வருகிறது. மனுதாரரின் கணவர் சீத்தாராமனின் பகுதி பாத்திய உரிமையில் இருந்து வந்த தாவா சொத்தினை எதிர்மனுதாரர் அடைய விரும்பி பொய்யான சங்கதிகளைக் கூறி சீர்காழி குத்தகை உரிமை பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியரிடம் மனுக்கொடுத்து அந்த விசாரணையில் தாவாச்சொத்து மனுதாரரின் கணவர் சீத்தாராமனுக்கு சொந்தமானது என்று 30.06.2010–ல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த குத்தகை உரிமை பதிவு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர்மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிஅசல் வழக்கு எண். 39/2010 என்ற வழக்கை 05.10.2010 அன்று தாக்கல் செய்து அந்த வழக்கானது 07.10.2013 அன்று வாதியின் தவறுகையினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு கோப்பில் எடுக்க வேண்டுமெனக்கோரி எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் மீது எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் C.R.P.No.738/2018 சீராய்வு மனுவானது மனுதாரரின் கணவருக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை மனுதாரர் பகுதி பாத்திய உரிமையை கிரையம் பெற்ற நாளிலிருந்து வசம் எடுத்து ஒரு பகுதியில் குடிசை வீடு கட்டி வசித்து பிற பகுதியில் புளிய மரங்கள், வேம்பு மரங்களை வளர்த்து பராமரித்து அனுபவித்து வந்து மனுதாரரின் கணவர் 01.01.2020 அன்று இறந்துவிட்டார். மனுதாரரின் கணவர் இறந்தபின் அவரது வாரிசு என்ற முறையில் மனுதாரர் பகுதிதாரர் என்ற முறையில் தாவாச்சொத்தை தொடர்ந்து அனுபவித்து வருகிறார். மனுதாரரைப் பார்ப்பதற்காக மனுதாரரின் மகன் பாஸ்கர் 26.04.2021 அன்று தாவாசொத்திற்கு வந்தபொழுது எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் தகாத வார்த்தைகளால் திட்டியதால் மனுதாரரின் மகன் எதிர்மனுதாரர் மீது வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த புகார் மனுவின் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட எதிர்மனுதாரர் மனுதாரரின் அமைதியான அனுபவத்தில் இருந்து வரும் தாவாச்சொத்தில் அத்தமீறி பிரவேசித்து ஆக்கிரமிக்கப்போவதாக 27.4.2021 முதல் பலரறிய கூறி வருகின்றார். எதிர்மனுதாரரின் சட்டப்புறம்பான செயலை நீதிமன்ற உறுத்துக்கட்டளை உத்தரவின் மூலமே தடுத்து நிறுத்த முடியும். எனவே தாவா சொத்தை மனுதாரர் அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ அல்லது முகவர்களோ எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கான எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் சுருக்கம்</u>**

தாவா சொத்து ஆதியில் சாம்பசிவம் மனைவி சிந்தாமணி என்பவரின் பகுதி பாத்திய உரிமையில் இருந்து வந்து, அந்த பகுதி பாத்திய உரிமையை மனுதாரரின் கணவர் சீத்தாராமன் என்பவருக்கு பிரதிபிரயோஜனத்திற்கு கொடுத்து சீத்தாராமன் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். தாவா புல எண். 10/1-ல் 1.42 ஏக்கர் நிலம் பிரதிவாதியின் பகுதிப்பாத்திய உரிமையில் இருந்து வருகிறது என்பதை மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். இதிலிருந்து தாவா சொத்து மனுதாரரின் அனுபவத்தில் இல்லை என்பது தெரியவரும். தாவா புல எண்ணில் உள்ள 1.42 ஏக்கர் நிலத்தில் எந்த நான்கெல்லையின் கீழ் தாவா சொத்து கிடைக்கப் பெற்றது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகின்ற புல எண். 10 /1 ல் 1.42 ஏக்கர் நிலத்தில் மனுதாரருக்கு கணவருக்கு எதிராக அசல் வழக்கு எண். 39-2010 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அந்த வழக்கின் பிரதிவாதியான இம்மனுவின் எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் அந்த வழக்கு வாதியின் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தள்ளுபடியான உத்தரவு எந்த வகையிலும் இந்த மனுவின் மனுதாரருக்கோ அவரது கணவர் சீத்தாராமனுக்கோ சாதகமாக சூழ்நிலைகளை ஏற்படுத்தகக்கூடியது அல்ல. மேற்படி தள்ளுபடியான உத்தரவை வைத்து எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகின்ற தாவா சொத்தின்மீது எந்த உரிமையும் கோர முடியாது. தாவாச்சொத்தின் உரிமையாளரான அருள்மிகு வேளூர் வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும். தாவாச்சொத்தின் உரிமையாளரான தேவஸ்தானத்தை தரப்பினராக சேர்த்திருந்தால் தாவா சொத்தானது மனுதாரரின் பெயர் கோயில் பதிவேடுகளில் இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் தேவஸ்தானத்தை தரப்பினராக சேர்க்கவில்லை. மனுவில் கூறியுள்ளவாறு 26.04.2021-ம் தேதியன்று எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை. மனுதாரர் வழக்கிற்காக பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரில் உண்மை இல்லை என்பதால் காவல்துறையினர் மனுதாரருக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்துவிட்டனர். மனுவில் கூறியுள்ளதுபோன்று 27.04.2021-ம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை. தாவா சொத்தினை எதிர்மனுதாரர் கடந்த 16.08.1994-ம் தேதியன்று தங்கவேல் முதலியார் என்பவரிடமிருந்து குத்தகை உரிமை மாற்று பத்திரம் எழுதிபெற்றுள்ளார். அதுமுதல் தாவாச்சொத்து எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து

வருகிறது. தாவாச்சொத்து மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருகின்றது என்பதற்கான எவ்விதமான ஆவணமும் மனுதாரா் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக மனுதாரா் தாக்கல் செய்துள்ள குத்தகை உாிமை பதிவு அலுவலா் உத்தரவு செல்லத்தக்கதல்ல. தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகளில் எந்த ஒரு வீடும் கிடையாத. எதிா்மனுதாரா் குடியிருந்து வரும் இடத்திற்கு தென்மேற்கில் மனுதாரா் குடியிருந்து வருகிறாா். மனுதாரா் குடியிருந்து வருடம் இடத்தின் புல எண் வேறு. மனுதாரா் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டுவாி ரசீதுகள் அனைத்தும் அவா் குடியிருந்து வரும் இடத்திற்கான வீட்டுவாி ரசீதுகள் ஆகும். கோவிட்–19 தொடா்பாக மத்திய, மாநில அரசுகள் பிறப்பித்த 144 தடை உத்தரவு அமலில் இருந்த போது மனுதாரா் சட்டத்தை மதிக்காமல் இடைமனுவில் இடைக்கால உத்தரவை வைத்துக்கொண்டு எதிா்மனுதாராின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் மனுதாரா் அடியாட்களுடன் வந்து ரூ.50,000/– பொருமானமுள்ள வேம்பு மற்றும் புளிய மரங்களை வெட்ட வந்து அதனை தடுத்த எதிா்மனுதாரரை தகாத வாா்தைகளால் திட்டினாா். இது தொடா்பாக எதிா்மனுதாராின் மனைவி கோமதி வைத்தீஸ்வரன்கோயில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாா் மனுவினை ஏற்று வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் குற்ற எண். 123/2021 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து எதிா்மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருவதால் அதற்கு மனுதாராா்தான் இடையூறு செய்து வருகிறாா். எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீா்வுக்குாிய பிரச்சனை</u>

மனுதாரா் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரா் மற்றும் எதிா்மனுதாரா் இருதரப்பிலும் சாட்சிகள் விசாாிக்கப்படவில்லை. மனுதாரா் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிா்மனுதாரா் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீா்வு</u>

மனுதாரா் தரப்பில் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பாிகாரம் கோாி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து அருள்மிகு வைத்தீஸ;வரன்கோயில் வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்துக்கு சொந்தமானது என்றும், தாவா சொத்தினை சாம்பசிவம் மனைவி சிந்தாமணி என்பவா் தேவஸ்தானத்திடம் பகுதி பாத்திய உாிமை பெற்று அவா் மனுதாராின் கணவா் சீதாராமனிடம் சாியான பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு தாவா சொத்தின் பகுதி பாத்திய உாிமையை மாற்றிக்கொடுத்து மனுதாராின் கணவாின் பகுதி

பாத்திய உாிமையிலும், அனுபவத்திலும் இருந்து வந்தது என்றும், எதிா்மனுதாரா்/பிரதிவாதிக்கு தாவா சொத்து புல எண். 10/1–ல் 1.42 ஏக்கா் நிலம் பகுதி பாத்திய உாிமையில் இருந்து வருகிறது என்றும், மனுதாராின் கணவா் சீத்தாராமனின் பகுதி பாத்திய உாிமையில் இருந்து வந்த தாவா சொத்தினை எதிா்மனுதாரா் அடைய விரும்பி பொய்யான சங்கதிகளைக் கூறி சீா்காழி குத்தகை உாிமை பதிவு அலுவலா் மற்றும் வட்டாட்சியாிடம் மனுக்கொடுத்து அந்த விசாரணையில் தாவாச்சொத்து மனுதாராின் கணவா் சீத்தாராமனுக்கு சொந்தமானது என்று 30.06.2010–ல் எதிா்மனுதாரா் தாக்கல் செய்த குத்தகை உாிமை பதிவு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் பின்னா் எதிா்மனுதாரா் மனுதாராின் கணவா்மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பாிகாரம் கோாிஅசல் வழக்கு எண். 39/2010 என்ற வழக்கை 05.10.2010 அன்று தாக்கல் செய்து அந்த வழக்கானது 07.10.2013 அன்று வாதியின் தவறுகையினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு கோப்பில் எடுக்க வேண்டுமெனக்கோாி எதிா்மனுதாரா் தாக்கல் செய்த மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் மீது எதிா்மனுதாரா் மாண்புமிகு சென்னை உயா்நீதிமன்றத்தில் C.R.P.No.738/2018 சீராய்வு மனுவானது மனுதாராின் கணவருக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தை பகுதி பாத்திய உாிமையை கிரையம் பெற்ற நாளிலிருந்து வசம் எடுத்து ஒரு பகுதியில் குடிசை வீடு கட்டி வசித்து பிற பகுதியில் புளிய மரங்கள், வேம்பு மரங்களை வளா்த்து பராமாித்து அனுபவித்து வந்து மனுதாராின் கணவா் 01.01.2020 அன்று இறந்துவிட்டாா் என்றும், மனுதாராின் கணவா் இறந்தபின் அவரது வாாிசு என்ற முறையில் மனுதாரா் பகுதிதாரா் என்ற முறையில் தாவாச்சொத்தை தொடா்ந்து அனுபவித்து வருகிறாா் என்றும், மனுதாரரைப் பாா்ப்பதற்காக மனுதாராின் மகன் பாஸ்கா் 26.04.2021 அன்று தாவாசொத்திற்கு வந்தபொழுது எதிா்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் தகாத வாா்த்தைகளால் திட்டியதால் மனுதாராின் மகன் எதிா்மனுதாரா் மீது வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் புகாா் கொடுத்துள்ளாா் என்றும், அந்த புகாா் மனுவின் மீது காவல்துறையினா் நடவடிக்கை எடுக்காததை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட எதிா்மனுதாரா் மனுதாராின் அமைதியான அனுபவத்தில் இருந்து வரும் தாவாச்சொத்தில் அத்தமீறி பிரவேசித்து ஆக்கிரமிக்கப்போவதாக 27.4.2021 முதல் பலரறிய கூறி வருகின்றாா் என்றும், எதிா்மனுதாராின் சட்டப்புறம்பான செயலை நீதிமன்ற உறுத்துக்கட்டளை உத்தரவின் மூலமே தடுத்து நிறுத்த முடியும் என்றும், எனவே தாவா சொத்தை மனுதாரா் அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிா்மனுதாரரோ அவரது ஆட்களோ அல்லது முகவா்களோ எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக

உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோரி மனுதாரா் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. எதிா்மனுதாரா் தரப்பில் தாவா சொத்து ஆதியில் சாம்பசிவம் மனைவி சிந்தாமணி என்பவாின் பகுதி பாத்திய உாிமையில் இருந்து வந்து, அந்த பகுதி பாத்திய உாிமையை மனுதாராின் கணவா் சீத்தாராமன் என்பவருக்கு பிரதிபிரயோஜனத்திற்கு கொடுத்து சீத்தாராமன் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை மனுதாரா் நிரூபிக்க வேண்டும் என்றும், தாவா புல எண். 10/1–ல் 1.42 ஏக்கா் நிலம் பிரதிவாதியின் பகுதிப்பாத்திய உாிமையில் இருந்து வருகிறது என்பதை மனுதாரா் ஒப்புக்கொண்டுள்ளாா் என்றும், தாவா புல எண்ணில் உள்ள 1.42 ஏக்கா் நிலத்தில் எந்த நான்கெல்லையின் கீழ் தாவா சொத்து கிடைக்கப் பெற்றது என்பதை மனுதாரா் நிரூபிக்கவில்லை என்றும், எதிா்மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருகின்ற புல எண். 10 /1 ல் 1.42 ஏக்கா் நிலத்தில் மனுதாரருக்கு கணவருக்கு எதிராக அசல் வழக்கு எண். 39/2010 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அந்த வழக்கின் பிரதிவாதியான இம்மனுவின் எதிா்மனுதாரருக்கு உடல்நிலை சாியில்லாததால் அந்த வழக்கு வாதியின் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் தள்ளுபடியான உத்தரவு எந்த வகையிலும் இந்த மனுவின் மனுதாரருக்கோ அவரது கணவா் சீத்தாராமனுக்கோ சாதகமாக சூழ்நிலைகளை ஏற்படுத்தக்கூடியது அல்ல என்றும், மேற்படி தள்ளுபடியான உத்தரவை வைத்து எதிா்மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருகின்ற தாவா சொத்தின்மீது எந்த உாிமையும் கோர முடியாது என்றும், மனுதாரா் வழக்கிற்காக பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் புகாா் கொடுத்து அந்த புகாாில் உண்மை இல்லை என்பதால் காவல்துறையினா் மனுதாரருக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்துவிட்டனா் என்றும், மனுவில் கூறியுள்ளதுபோன்று 27.04.2021–ம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், தாவா சொத்தினை எதிா்மனுதாரா் கடந்த 16.08.1994–ம் தேதியன்று தங்கவேல் முதலியாா் என்பவாிடமிருந்து குத்தகை உாிமை மாற்று பத்திரம் எழுதிபெற்று அதுமுதல் தாவாச்சொத்து எதிா்மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தாவாச்சொத்து மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருகின்றது என்பதற்கான எவ்விதமான ஆவணமும் மனுதாரா் தாக்கல் செய்யவில்லை என்றும், தாவா சொத்து சம்பந்தமாக மனுதாரா் தாக்கல் செய்துள்ள குத்தகை உாிமை பதிவு அலுவலா் உத்தரவு செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகளில் எந்த ஒரு வீடும் கிடையாது என்றும், எதிா்மனுதாரா் குடியிருந்து வரும் இடத்திற்கு தென்மேற்கில் மனுதாரா் குடியிருந்து வருகிறாா் என்றும், மனுதாரா் குடியிருந்து வருடம் இடத்தின் புல எண் வேறு என்றும், மனுதாரா் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டுவாி ரசீதுகள் அனைத்தும்

அவா் குடியிருந்து வரும் இடத்திற்கான வீட்டுவாி ரசீதுகள் என்றும், மனுதாரா் இம்மனுவில் பெற்றுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளையை வைத்துக்கொண்டு தாவாச்சொத்தில் உள்ள மரங்களை வெட்ட வந்தாா் என்றும், இது தொடா்பாக எதிா்மனுதாராின் மனைவி கோமதி வைத்தீஸ்வரன்கோயில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாா் மனுவினை ஏற்று வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்தில் குற்ற எண். 123/2021 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து எதிா்மனுதாராின் அனுபவத்தில் இருந்து வருவதால் அதற்கு மனுதாரா்தான் இடையூறு செய்து வருகிறாா் என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எதிருரையில் கூறியுள்ளாா்.

8. மனுதாரா் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. . வழக்குக் கோப்புக்கள் பாிசீலிக்கப்பட்டன. வழக்கின் ஆவணங்களை பாிசீலனை செய்ததில் அசல் வழக்கானது மனுதாரரால் எதிா்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பாிகாரம் கோாி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தொியவருகிறது. மனுதாரா் மற்றும் எதிா்மனுதாரா் இருதரப்பிலும் இடைமனு எண். 1/2020 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் இந்த மனுவிற்கும் சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ளக் கோரப்பட்டது. மனுதாரா் தரப்பில் மனுதாராின் கணவா் சீத்தாராமனுக்கு எதிராக எதிா்மனுதாரா் மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் குத்தகை உாிமை பதிவு மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடு 12.03.2013-ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகக் கூறி மயிலாடுதுறை வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியா் மற்றும் குத்தகை உாிமை மேல்முறையீட்டு அலுவலாின் கு.உ.ப.மே.மு.எண். 01/02010-ல் 12.03.2013-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ம.சா.ஆ.1 ஆகவும், தாவாச்சொத்தின் குத்தகை உாிமையை மனுதாராின் கணவா் சீத்தாராமனுக்கு சிந்தாமணி குத்தகை உாிமை மாற்றுதல் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாகக்கூறி 18.07.2000-ம் தேதியிட்ட குத்தகை உாிமை பதிவு மாற்றல் பத்திரத்தின் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், இந்நீதிமன்ற அசல் வழக்கு எண். 109/90-ல் 10.11.1997-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீா்ப்பாணையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆகவும், இந்நீதிமன்றம் அசல் வழக்கு எண். 39-2010-ல் 07.10.2013-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீா்ப்பாணையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகவும், இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.123/2001-ல் 17.08.2004-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீா்ப்புரையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகவும், மயிலாடுதுறை கூடுதல் சாா்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 158/2004-ல் 11.02.2005-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீா்ப்புரையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.,6 ஆகவும், மனுதாராின் கணவா் சீத்தாராமனுக்கு நாகப்பட்டினம் கூடுதல் காவல் கண்காணிப்பாளா்

அனுப்பிய உத்தரவு ம.சா.ஆ.7 ஆகவும், மனுதாரா் கணவா் சீத்தாராமன் மற்றும் சிந்தாமணி பெயருககான சொத்துவாி ரசீதுகள் (எண்ணிக்கை 19) ம.சா.ஆ.8 ஆகவும், சிந்தாமணி பெயருக்கான வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி வழங்கிய வீட்டுவாி செலுத்துதல் விபரஅட்டை ம.சா.ஆ.9 ஆகவும் சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

9. தாவா சொத்து வைத்தீஸ்வரன்கோயில் வைத்தியநாதசாமி தேவஸ்தானத்துக்கு சொந்தமானது என்பதைப்பொறுத்து எவ்விதமான பூசலும் இல்லை. மனுதாரா் தரப்பில் தாவாச்சொத்தினை சிந்தாமணி என்பவா் தேவஸ்தானத்திடம் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு அனுபவித்து வந்து, மேற்படி சிந்தாமணி தாவாச்சொத்தின் குத்தகை உாிமையை மனுதாராின் கணவா் சீத்தாராமனுக்கு மாற்றிக்கொடுத்து அவா் அனுபவித்து வந்து அவா் 01.01.2020 அன்று இறந்தபின் மனுதாரா் அனுபவித்து வருவதாகவும், தாவா புல எண்ணில் உள்ள சொத்தினை குத்தகை சாகுபடி உாிமையை பெற்றுள்ள எதிா்மனுதாரா் தாவாச்சொத்தின் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்யும்விதமாக 27.4.2021 அன்று தாவாச்சொத்தில அத்துமீறி பிரவேசிக்க முயன்று அதனை மனுதாரா் தடுத்துவிட்டாா் என்றும், எனவே தாவா சொத்தின் மனுதாராின் அனுபவத்திற்கு எதிா்மனுதாரரோ அவரது ஆட்களோ எவ்விதமான இடையூறும் விளைவிக்கக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை பாிகாரம் இம்மனுவில்கோாியுள்ளாா். எதிா்மனுதாரா் தரப்பில் தாவா சொத்தின் குத்தகை உாிமையை எதிா்மனுதாரா் 16.08.1994–ம் தேதியன்று தங்கவேல் முதலியாா் என்பவாிடமிருந்து பெற்று அதுமுதல் தாவாச்சொத்தை அனுபவித்து வருவதாக கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளாா். இந்நிலையில் தாவாச்சொத்து மனுதாரா் கூறுவதுபோல் மனுதாராின் கணவா் சீத்தாராமனின் பகுதி பாத்திய அனுபவத்தில் இருந்து அவா் இறந்த பின்னா் மனுதாராின் அனுபவத்தில் உள்ளதா? என்பதைப்பொறுத்தும், எதிா்மனுதாரா் கூறுவதுபோல் தாவாச்சொத்து 16.08.1994–ம் தேதி தங்கவேல் முதலியாா் என்பவாிடமிருந்து பெற்ற குத்தகை உாிமை மாற்றுப்பத்திரம் மூலம் எதிா்மனுதாராின் அனுபவத்தில் உள்ளதா என்பதைப்பொறுத்தும் இவ்வழக்கில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்தபின்னரே அசல் வழக்கில் தீா்வு காண இயலும். இந்த மனுவில் மனுதாரா் மற்றும் எதிா்மனுதாரா் இருதரப்பிலும் எவ்வித சாட்சியங்களும் விசாரணை செய்யாமல் இந்த இடைமனுவில் தீா்வு காண இயலாது. இந்த மனுவில் இருதரப்பிலும் சாட்சியங்கள் விசாாிக்கப்படவில்லை. அசல் வழக்கில் கோாியுள்ள அதே பாிகாரத்தையே மனுதாரா் இந்த மனுவில் கோாியுள்ளதாலும், அசல் வழக்கானது விசாரணைக்கு தயாராக உள்ள நிலையிலும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பாிகாரம் கோாி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இருதரப்பு சாட்சிகளையும் விசாரணை செய்யாமல் இந்த இடைமனுவில் இறுதி நிலை முடிவு எடுக்க

இயலாது என்பதாலும் இந்த மனுவை முடித்து வைத்து (Closed) உத்தரவு பிறப்பிப்பதே சாியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீா்வு காணப்படுகிறது. இம்மனுவில் ஏற்கனவே 29.04.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு நீக்கரவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

முடிவில் இம்மனுவினை செலவுத்தொகையின்றி முடித்து வைத்து (Closed) உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இம்மனுவில் 29.04.2021 அன்று பிறப்பிக்க்ப்பட்டுள்ள ஒருதலைபட்ச இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு நீக்கரவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சாிபாா்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு ஜனவாி மாதம் 11-ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உாிமையியல் நீதிபதி, சீா்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரா் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>எதிா்மனுதாரா் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |

<u>மனுதாரா் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.03.2013 | எதிா்மனுதாரா் மயிலாடுதுறை வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியாிடம் தாக்கல் செய்த கு.உ.ப.மே.மு.எண். 01/2010-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு |
| ம.சா.ஆ.2 | 18.07.2000 | சீத்தாராமனுக்கு சிந்தாமணி அம்மாள் எழுதிக்கொடுத்த குத்தகை உாிமை மாற்றுதல் பத்திரத்தின் அசல் |
| ம.சா.ஆ.3 | 10.11.1997 | சீா்காழி மாவட்ட உாிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 109/90-ல் பிறப்பிக்கப்பட்ட தீா்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 07.10.2013 | சீா்காழி மாவட்ட உாிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 39/2010-ல் பிறப்பிக்கப்பட்ட தீா்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 17.08.2004 | சீா்காழி மாவட்ட உாிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 123/2001-ல் பிறப்பிக்கப்பட்ட தீா்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 11.02.2005 | மயிலாடுதுறை கூடுதல் சாா்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 158/2005-ல் பிறப்பிக்கப்பட்ட தீா்ப்புரையின் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | 13.03.2015 | நாகப்பட்டினம் பொது தகவல் அலுவலா மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளாின் ஆணை எண். 60/த.அ.உ.ச./மா.கு.ப.கூ/நா.மா./2015–ல் பிறப்பித்த உத்தரவு |
| ம.சா.ஆ.8 | – | வைத்தீஸ்வரன்கோயில பேரூராட்சி சீத்தாராமன் மற்றும் சிந்தாமணி பெயருக்கு வழங்கிய சொத்துவாி ரசீதுகளின் வாிசை ( 19 ரசீதுகள்) |
| ம.சா.ஆ.9 | – | சிந்தாமணி பெயருக்கு வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி வழங்கிய வீட்டுவாி செலுத்துதல் விபர அட்டையின் அசல் |

<u>எதிர்மனுதாரா் தரப்பு சான்றாவணங்கள்</u> –இல்லை–

மா.உ.நீ.

நோிய / வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 67/2021-ல்
இடைமனு எண். 02/2021
நாள் – 11.01.2022